பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22. 01 .2025 7. 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி, அக்கட்சியின் வாக்குச்சாவடி நிர்வாகிகளுடன் இன்று கலந்துரையாடுகிறார்.
2. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென நடத்தை விதிகளை வகுக்குமாறு அரசியல் கட்சிகளை மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.
3. மும்பை ஜவஹர்லால்நேரு துறைமுகத்தில் 284 கோடி ரூபாய் செலவில் அதிநவீன வேளாண் பதப்படுத்தும் மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் முன்னிலையில் கையெழுத்தானது.
4. அமெரிக்க சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வாஷிங்டனில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்க்கோ ரூபியோ-வை சந்தித்து பேசினார்.
5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் உத்திரபிரதேச அணி இரண்டு — பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் கோணாசிகா அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி, அக்கட்சியின் தில்லி பிரதேச வாக்குச்சாவடி அளவிலான நிர்வாகிகளுடன் இன்று நமோ செயலி வாயிலாக கலந்துரையாடவுள்ளார்.

எனது வாக்குச்சாவடி வலிமையானது என்ற தலைப்பில் இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அப்போது வாக்குச்சாவடி நிர்வாகிகளுடன் பிரதமர் நேரடியாக கலந்துரையாடி தேர்தல் பணிகளை ஊக்குவிக்க இருப்பதாக நமோ செயலியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் திரு குல்ஜித்சிங் சாஹல் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த அவைகளின் கண்ணியத்தை நிலைநாட்டும் வகையில் செயல்படுவதற்கென நடத்தை விதிகளை வகுக்குமாறு அரசியல் கட்சிகளை மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில், நாடாளுமன்ற சட்டமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

அந்தந்த கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு நடத்தை விதிகள் இருந்தால்தான் இது சாத்தியமாகும் என்றும் திரு ஓம் பிர்லா கூறினார்.

**[]<<<>>>[]**

கோவா மாநிலத்தை காற்று மாசுபாடு மற்றும் விபத்து இல்லாத மாநிலமாக மாற்ற நெடுஞ்சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில் கவனம் செலுத்துமாறு அம்மாநில அரசை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கேட்டுக் கொண்டுள்ளார்.

மர்மகோவா துறைமுகத்தின் இணைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நாலாயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள நெடுஞ்சாலை திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்து அவர் பேசினார்.

இந்த திட்டங்கள் அம்மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

மும்பை ஜவஹர்லால்நேரு துறைமுகத்தில் 284 கோடி ரூபாய் செலவில் அதிநவீன வேளாண் பதப்படுத்தும் மையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தம் மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

இந்த மையம் 27 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் சூரிய சக்தியால் இயங்கும் இரண்டு படகுகள், உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட இரண்டு இலுவை கப்பல்கள் மற்றும் மூன்று தீயணைப்பு வாகனங்களின் சேவையையும் திரு சர்பானந்த சோனாவால் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

அமெரிக்க சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வாஷிங்டனில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்க்கோ ரூபியோ-வை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது இந்தியா – அமெரிக்க இடையேயான இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும், திரு மார்க்கோ ரூபியோ-வுடன் இணைந்து பணியாற்றி இரு நாடுகளுக்கும் இடையேயான நீடித்த ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்ல ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்,

[]<<<>>>[]

அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு மார்க்கோ ரூபியோ வாஷிங்டனில் நேற்று இரவு குவாட் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

திரு ரூபியோ அமைச்சராக பொறுப்பேற்ற பின் முதலாவது நிகழ்ச்சியாக குவாட் அமைப்பின் உறுப்பினராக உள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

[]<<<>>>[]

ராணுவத்திற்குத் தேவையான 47 டி-72 ரக பீரங்கிகள் தயாரிக்க ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒப்பந்தம் சென்னையை அடுத்த ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலைக்குக் கிடைத்துள்ளது.

புதுதில்லியில் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு ராஜேஷ்குமார் சிங் முன்னிலையில், இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

போர்க்காலங்களில் தற்காலிக பாலம் அமைக்க பயன்படும் இந்த பீரங்கிகள் ராணுவத்தின் போர்த்திறனை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஆவடியில் உள்ள கவச வாகன ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு மையத்தின் பொன்விழா கொண்டாட்டங்களையொட்டி நேற்று பாலிடெக்னிக் மற்றும் ஐ டி ஐ மாணவர்களுக்காக பிரத்யேக கண்காட்சி நடைபெற்றதாக பாதுகாப்புத்துறை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவிற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அம்மாநில சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், தலைமையில் பிரயாக்ராஜில் இன்று நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடும் பக்தர்கள் மற்றும் யாத்ரிகர்களுக்கான வசதிகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மவுனி அமாவாசை தினத்தன்று எட்டு முதல் பத்து கோடி மக்கள் பிரயாக்ராஜ் வரக்கூடும் என்பதால் 400 சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளதாக வடக்கு மத்திய ரயில்வே அறிவித்துள்ளது.

ரயில் பயணிகளுக்குத் தேவையான மருத்துவசதி செய்து தரப்படுவதுடன், ரயில்வே பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

மருத்துவ சிகிச்சைகளுக்காக தமிழகத்திற்கு வருவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவீத்துள்ளார்.,

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத்தில் உள்ள 403 அரசு மருத்துவமனைகளுக்கு தேசிய தர உறுதி சான்றிதழ்களை வழங்கி அவர் பேசினார்.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியாவில் சிகிச்சை பெற வருவோரில் 20 சதவீதத்தினர் தமிழகத்திற்குத்தான் வருவதாக அவர் கூறினார்.

ஆண்டிற்கு 15 லட்சம் என்ற அளவிற்கு வெளிநாட்டினர் சிகிச்சை பெற்று செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநில அரசால் செயல்படுத்தப்படும் இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் சாலை விபத்தில் சிக்கிய மூன்று லட்சத்து 23 ஆயிரம் பேர் இதுவரை காப்பாற்றப்பட்டிருப்பதாகவும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதல் முறையாக நவீன செயற்கைக்கால் பொருத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 70 வயது முதியவருக்கு இந்த செயற்கைக் கால் பொருத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜா ) ---39 செகண்ட்*

**[]<<<>>>[]**

இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறும் என ஜெர்மனி பிரதமர் திரு **Olaf scholz** நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டாவோஸில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மண்டலக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவைப்போன்று வேறு சில நாடுகளுடனும் இதுபோன்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் கூறினார்.

இதற்கான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் பல்வேறு நாடுகளுடனும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வது ஐரோப்பிய நாடுகளுக்கு உதவிகரமாக அமையும் என்றும் திரு **Olaf scholz** தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் உத்திரபிரதேச அணி இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் கோணாசிகா அணியை வென்றது.

மகளிர் பிரிவில் சூர்மா – ஒடிஸா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஆடவர் பிரிவில் தில்லி – சூர்மைா அணியையும், மகளிர் பிரிவில் பெங்கால் - தில்லி அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி கொல்கத்தா ஈர்டன் கார்டர் மைதானத்தில் இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் எஞ்ஜிய ஆட்டங்கள் சென்னை, ராஜ்கோட், புனே, மும்பை ஆகிய நகரங்களில் நடைபெறுகிறது.,

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை – மோகன் பெஹாண் அணிகளுக்கிடையேயான ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களுரு – ஒடிஸா அணிகள் மோதுகின்றன.

***End of News***